1993 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 537 திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்,

537—

சத்தியமங்கலம் தொகுதி உடல் ஊனமுற்ற குழந்தைகள், முதியோர்களுக்கு ஊன்றுகோல், சக்கரவண்டி, தையல் மெஷின் ஆகியவை வழங்கல்.

*9271—திருமதி அ.தி. சரஸ்வதி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதி மலைப்பகுதியாக இருப்பதால் அங்குள்ள உடல் ஊனமுற்ற குழந்தைகள், முதியோர்களுக்கு ஊன்றுகோல், சக்கரவண்டி, தையல்மெஷின் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆவன செய்யும்.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் ஆட்சியில் தமிழகத்தில் அரசு தொட்டில் வளர்ப்பு குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு, உடல் ஊனம் உற்றோருக்கு சைக்கிள்கள் எத்தனை வழங்கப்பட்டிருக்கிறது, தையல் மெஷின்கள் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது, முதியோருக்கு உதவித் தொகை எத்தனைபேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது, அரசு இலவச திருமண உதவித்தொகை எத்தனைபேருக்கு. (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கெல்லாம் தனிக் கேள்வி போட வேண்டும். உங்கள் தொகுதிபற்றி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மலைவாழ் மக்கள், ஏழை மக்கள் மிகவும் அதிகம் வாழும் தொகுதியாகும். அந்த ஏழைகளின் வாழ்வு கருதி உடல் ஊனம் உற்றோர் இல்லம், அநாதை இல்லம், முதியோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மலைப் பகுதியாக அவர் தொகுதி இருப்பதால்

அங்கு உடல் ஊனம் உற்ற குழந்தைகள் முதியோர்களுக்கு ஊன்று கோல், சக்கரவண்டி, தையல்மெஷின் வழங்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டார்கள். அவர்களுடைய தொகுதியிலே பெறப்பட்டமனுக்கள் தையல் மெஷினுக்காக 6-ம் 3 சக்கர வண்டிக்காக 4, காது கேட்கும் கருவி ஒன்றும் கேட்டிருந்தார்கள். அவைகள் அத்தனையும் வழங்கப்பட்டு விட்டன. தொடர்ந்து விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டால் அதையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 538 திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

538—

கல்லிடைக்குறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் சத்துணவுக் கூடம்.

* 11696—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழக்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சி அரசு உயர் நிலைப்பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : சமூகநலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக் குறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் சத்துணவுக்கூடம் அமைக்க செயற்குறிப்பு உள்ளதா என்று கேள்வி கேட்டிருக்கிறேன். அமைச்சர் மொட்டையாக இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். ஏன் இல்லை ? அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஏன் சத்துணவு கூடம் அமைக்கவில்லை என்று தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே கேள்வி கேட்டவுடன் இல்லை என்று தான் சொல்லுவார்கள். அதற்கு பின்னால் திரும்பவும் கேள்வி கேட்கிறபோது விரிவான பதில் அளிக்கப்படும் என்பதை தொடர்ந்து சட்டமன்றத்திலே